# தரமற்ற உருளைக்கிழங்கு விதைகள் அனுப்பப்பட்ட விவகாரம் ஆராய்வதற்கு விசேட குழு யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம்!

## குப்பிளான் களஞ்சியத்துக்குச் சென்று பார்வையிட்டனர்



யாழ்ப்பாணம் குப்பிளானில் களஞ்சியப்பட்டுத்தப்பட்டுள்ள உருளைக்கிழங்கு விதைகள் தொற்றுக்குள்ளானமை தொடர்பாக ஆராய கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளது.

விவசாய அமைச்சு மற்றும் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் உயரதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் அண்மையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ பக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்குள்ளாமையினால் பழுதடைந்திருந்தமை தொடர்பில் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக் கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 06 புதன்கிழமை 27.12.2023 கதிர் 145




3 ஆம் பக்கத்தில் ...

# அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரம் கிடைக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்வதே தனது எதிர்பார்ப்பு என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்க் கட்சிக்கு செல்வதோ அல்லது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தை பெறுவதோ எமது எதிர்பார்ப்பு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை (26) இரண்டாவது நாளாக ஆரம்பமான "கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பம்" கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2 ▶

## சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இன்றிலிருந்து மீண்டும் ஆரம்பம்!

போதைப்பொருள் பாவனை மற்றும் பாதாள குழுக்களின் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இன்றிலிருந்து (27) மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகையின் காரணமாக பொலிசார் விசேட கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் கடந்த மூன்று நாட்கள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மட்டுப்படுத்த நேர்ந்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தலைதுவ தெரிவித்தார்.

அதற்கமைய , கடந்த 25 ஆம் திகதிவரை மொத்தமாக 13,666 பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களில் 1,097 பேர் மறுவாழ்வளிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். (04)

## மழைக்காலங்களில் அதிகளவில் பரவும் "கை வாய் பாதம் நோய்!"

### குழந்தைகளை தாக்குகிறது!



தோல் மருத்துவர் அனுசன் கைலைநாதன் தனது சமூகவலைப் பக்கத்தில் பகிர்ந்த தகவலை காலத்தின் அவசியம் கருதி வாசகர்களுக்குத் தருகிறோம்.

சில நாட்களாக சிறு குழந்தைகள் கொப்புளிப்பான் போன்ற கொப்புளங்களுடன்

2 ▶

# யாழ். போதனாவில் டெங்கால் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சலால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், அச்சுவேலி - தோப்பு பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் சாரூரன் (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நிலையில், அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மூளைச் சாவடைந்திருந்தார்.

அங்கு அவருக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாத்திரம் 71 பேர் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு காரணமாக இரண்டு விடுதிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன என்றும், குழந்தை நோயாளர் விடுதி நிரம்பியுள்ளது என்றும் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

2 ▶

## மருந்து விநியோக விசாரணைகள் நிறைவு அறிக்கை விரைவில் சுகாதார அமைச்சுக்கு

மருந்துக் கொடுக்கல் - வாங்கல் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தால் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

விசேட விசாரணையின் அறிக்கையை சுகாதார அமைச்சுக்கு அனுப்ப எதிர்பார்த்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டிபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

# வெங்காய இறக்குமதிக்கு முனைப்பு விலை விரைவில் குறைவடையுமாம்!

பாகிஸ்தானிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ள நிலையில், பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறைவடையும் என பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தானிலிருந்து இந்த வாரம் பெருமளவு பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டவுள்ளதுடன், அடுத்த மாதம் சீனா மற்றும் நெதர்லாந்திலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதன்காரணமாக பெரிய வெங்காயத்தின் விலை வெகுவிரைவில் குறைவடையும் என பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய வெங்காய தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில், பாகிஸ்தான், சீனா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

2 ▶

# சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தில் பெரு வெள்ளம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு எல்லைப் பிரதேசத்தில் இன்று ( 27) அதிகாலை முதல்பெய்த பலத்த மழையினால் பிரதான வீதியில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இதனால் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தந்திருந்த நோயாளிகள் பலர் பலத்த சிரமங்களுக்குள்ளானார்கள். இதேவேளை தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ள துடன், சில குடும்பங்கள் தங்கள் உறவினர்கள் வீட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடிகான்களில் மண்களும் திண்மக்கழிவுகளும் அடைத்துள்ளதால் சிறு மழைக்கும் பெரு வெள்ளம் ஏற்படக்கூடிய நிலமை ஏற்பட்டுள்ளது.

# மருந்துகளை விடுவிக்க விசேட குழு நியமனம்

இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை துறைமுகத்தில் இருந்து விடுவிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்று(27) முதல் குறித்த குழு செயற்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர், விசேட வைத்தியர் பாலித மஹீபால குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பதிவு செய்வதற்கான கால எல்லையைக் கடந்துள்ள மருந்துகளுக்கான காலத்தை எதிர்வரும் ஜூன் மாத இறுதி வரை நீடித்துள்ளதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# வாள்வெட்டு நபர் கசிப்புடன் கைது!

வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கோப்பாய் கொட்டைக்காடு பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தின் மூன்று திறந்த பிடியாணைகள் விடுவிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகி இருந்தபோது குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் கோப்பாய் பொலிஸாரும் இணைந்து கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபரிடம் இருந்து 15 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

## வெங்காய இறக்குமதிக்கு முனைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமை, 380 ரூபாயிற்கு மொத்த வியாபாரிகள் விற்பனை செய்வதாகவும் இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர்.

350 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயமே, இவ்வாறு 380 ரூபாவிற்கு மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படுகிறது.

பெரிய வெங்காயத்தின் சில்லறை விலையாக 405 ரூபா முதல் 420 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மழைக்காலங்களில் அதிகளவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்காக வருவதுண்டு. சில வேளைகளில் தவறாக கொப்புளிப்பான் அல்லது நுளம்பு கடிக்கான ஒவ்வாமை போன்று சிகிச்சை பெற்றிருப்பதை காண முடிந்தது.

அது உண்மையில் Hand foot mouth disease எனும் ஓர் வைரஸ் தாக்கமாகும்.

பார்ப்பதற்கு கொப்புளிப்பான் போன்று இருந்தாலும் இது வேறு வகையான வைரஸ் நோயாகும்.

**HFMD (Hand Mouth Foot disease)** என ஆங்கிலத்தில் அழைக்கப்படும். கை வாய் பாதம் நோய் **(Hand Mouth Foot disease-HFMD in Tamil)** என்பது ஒருவிதமான தொற்று நோயாகும். இந்த வகை தொற்று நோய் பரவுவதற்கு வைரஸ் கிருமிகள்தான் காரணம்.

காக்ஸ்சாக்கி என்னும் வகை வைரஸ்களால் இந்தக் 'கை வாய் பாத' நோய் பரவுகிறது.

இந்த வைரஸ்கள் மழைக்காலங்களில் தான் அதிக அளவு பரவி குழந்தைகளைத் தாக்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பிறந்த குழந்தைகள் முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வரை பலரும் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த **HFMD** வியாதியின் அறிகுறிகள் என்ன?

1. முழங்கை, முழங்கால் மற்றும் பாத அடிப்பகுதிகளில் சிவப்பு கொப்பளங்கள். (கொப்பளங்கள் ஒரு குழுவாகக் காணப்படும். இவை அரிப்பு ஏற்படுத்தாது.)
2. உதட்டின் மேல் கொப்பளம்.
3. காய்ச்சல்
4. தொண்டை வலி

இந்நோயில் இருந்து மீள்வது எப்படி?

இந்த நோய்க்கு என்று தனியாக மருந்து எதுவும் கிடையாது. இந்த வியாதி ஏற்பட்ட முதல் மூன்று நாட்களில் வாயில் புண்கள் காணப்படும். ஐந்து நாட்களுக்குள் படிப்படியாக இந்த புண்கள் மறைந்து வியாதி குறையத் தொடங்கும்.

உடல் தானாகவே இந்த வைரஸ்க்கு எதிராகச் செயல்படும். தேவையான எதிர்ப்புச் சக்தி உருவான பிறகு உடல் தன்னை நோயில் இருந்து விடுவித்துக் கொள்ளும்.

இந்த வியாதியானது தானாகவே சரியாகி விடும் என்பதால் இதைக் குறித்து மிகவும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

## யாழ். போதனாவில் டெங்கால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை 11 மாத ஆண் குழந்தை ஒன்று டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தது. அத்துடன் கடந்த சனிக்கிழமை டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு வழங்கப்பட்ட மருந்து ஒவ்வாமையால் அவரும் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அடுத்த தேர்தலிலும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பக் கல்விக் கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சி கிரிந்திவெல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கிரிந்திவெல மகா வித்தியாலயத்தை மையமாகக் கொண்டு கடந்த (25) ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் ஆரம்பமானது.

அது 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இது அரச, பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளில் 50 க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் வர்த்தக கடைத் தொகுதிகளைக் கொண்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

கேள்வி - அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு. கட்சிக்கு புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பீர்களா?

பதில் - அப்படி எதுவும் இல்லை. தற்போது இருக்கின்ற அமைப்பாளர்களின் தவறில்லை. தேர்தலும் உண்டு.

கேள்வி - கட்சியில் இருந்து விலகியவர்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன?

பதில் - கட்சியில் இருந்து விலகியவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள். அந்த விஷயங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன என்று நினைக்கிறேன்.

கேள்வி - இந்நாட்களில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

பதில் - இந்த அரசாங்கம் செய்த சிறந்த பணியாக நான் இதைக் கருதுகிறேன். போதைப்பொருளால் இந்த நாடு அழிந்து வருகிறது.

கேள்வி - எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்க நீங்கள் தயாராகி வருவதாகப் பேசப்படுகிறது. அது உண்மையா?

பதில் - இதுவரை அப்படி ஒரு கதை இல்லை. அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு. எதிர்க்கட்சிக்கு செல்லும் எதிர்பார்ப்பு எம்மிடம் இல்லை.

கேள்வி - எதிர்காலத்தில் வரி குறைக்கப்படுமா? அதிகரிக்கப்படுமா?

பதில் - வரிகளை நீக்க முடியாது. வரிகள் இருக்கும். அதாவது மக்களுக்கு நியாயமான வரி முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நான் கூறுகிறேன். (அ)

## தரமற்ற உருளைக்கிழங்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் குறித்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், களஞ்சியப்பட்டுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்கு தொடர்பாக ஆராய கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று இன்று களஞ்சிய சாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர்.

விவசாய அமைச்சின் விவசாயத் தொழில் நுட்ப பணிப்பாளரும் நவீனமயமாக்கல் திட்டப் பிரதிப் பணிப்பாளருமாகிய அனுர வியதுங்க, வடமாகாண விவசாய நவீன மாக்கல் திட்டத்தின் பிரதி மாகாண திட்டப்பணிப்பாளர் ஏ.விஜிதரன், விவசாய விஞ்ஞானி டபிள்யூ.டி. லெஸ்லி, நவீன மயமாக்கல் திட்ட உள்ளக கணக்காய்வாளர் டபிள்யூ.ஏ.ஜி.வீரசிங்க, யாழ்ப்பாண உருளைக்கிழங்கு நவீன மயாக்கல் திட்ட சங்கத்தின் தலைவர் எஸ்.துசியந்தன் ஆகியோர் இதில் இணைந்துகொண்டனர்.

தேசிய தாவர தடுப்பு காப்பு சேவையின் ஆலோசனையின் பின்னர் உருளைக்கிழங்கு விதைகள் தொடர்பாக முடிவு எட்டப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (04)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

## திருக்கோவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் நடேசராபிசேகமும் திருவாதிரைத் தீர்த்தமும்





(வி.ரி. சகாதேவராஜா).

திருக்கோவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் வருடாந்த திருவெம்பாவை உற்சவத்தின் திருவாதிரை தீர்த்தம் இன்று காலை 6.15 மணியளவில் பக்திப்பரவசத்துடன் நடைபெற்றது.

குருகுலப்பணிப் பாளர் கண இராஜரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நள்ளிரவில் ஆருத்ரா அபிஷேகமும் இடம்பெற்றது. அதிகாலையில் ஆருத்ரா தரிசனமும் அதனை அதனைத் தொடர்ந்து குருகுலத்தின் தீர்த்தக் கிணற்றில் தீர்த்த உற்சவம் இனிதே நிறைவேறியது.

கௌரி அம்மன் ஆலய பிரதம குரு. நிலோஜன் ஐயா கிரி யைகளை நடத்தினார். அதனைத் தொடர்ந்து திருவம்பாவை பூசை யில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகளும் வழங்கி வைக் கப்பட்டன.

இல்ல செயலாளர் பா.சந்திரேஸ்வரன் (அதிபர்) உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



## கொழும்பு இந்து பெண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு, வெள்ளவத்தை இந்து பெண்கள் (சைவ மங்கயர் வித்தியாலயம்) கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி. அருந்ததி ராஜவிஜயன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் கலாநிதி ராஜேந்திர சுரேந்திரகுமரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் திறமைகளை வெளிப்படுத்திய மாணவிகள் இந்நிகழ்வின்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

## அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தின் பழைய மாணவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(கே.எ.ஹமீட்)

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்யபட்டுள்ள மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29) அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பகல் இரவு போட்டிகளாக இடம்பெறும் இச்சுற்றுப் போட்டி எதிர்வரும் 29, 30 31 ஆம் திகதிகளில் இடம்பெறும். பழைய மாணவர்களின் 21 அணிகள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள உள்ளன .

இச்சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு ரூபா 75,000 பணப் பரிசும் சம்பியன் கேடயமும், இரண்டாமிடம் பெறும் அணிக்கு ரூபா 50,000 பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப் படும் .

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் கடந்த காலங்களில் கல்வி பயின்ற பழைய மாணவர்களை ஒன்று சேர்த்து பாடசாலையின் அபிவிருத்தியில் அவர்களை ஒன்று சேர்க்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இக்கிரிக்கெட் சுற்றுபோட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப நாள் நிகழ்வின்போது இப்பாடசாலையில் கல்வி பயின்று உயர் நிலைப் பதவிகளில் கடமையாற்றி வருபவர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் அழைக்கப்பட்டு கிரிக்கெட் வீரர்கள் சகிதம் அவர்கள் பாடசாலை வளாகத்தில் இருந்து அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம் வரை நடைபவனியாக முஸ்லிம் சமய பண்பாட்டு விடயங்களுடன் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.



## மிதி வெடி

*யாழ்ப்பாணத்தில் இப்போது நத்தார் - புது வருச வியாபாரம் சூடு பிடிச்சிருக்கோ இல்லையோ. டெங்கு நுளம்பு ஒரு பிடி பிடிச்சுத்தான் இருக்குது.*

*இதென்னண்ணை, நத்தாருக்கும், நுளம்புக்கும் என்ன சம்பந்தம்? உதென்ன விசரலம்பல் எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது எனக்கும் கேக்குது பாருங்கோ.. சம்பந்தம் இருக்குது. நுளம்பு வளருது, வளருது எண்டு மருத்துவத்துறை கத்திக் கொண்டு தான் இருக்குது. ஆனா யாரு கேக்கிறியள்? கடைசியா இலங்கையில டெங்கு வேகமாப் பரவிற மாவட்டங்களில கொழும்புக்கு அடுத்ததா யாழ்ப்பாணமும் முன்னுக்கு நிக்குது. கிட்டடியில கூட ஒரு கம்பஸ் பிள்ளை டெங்குவால ஆசுப்பத்திரிக்குப் போக, அங்க ஏத்தின மருந்தால ஒவ்வாமை வந்து செத்துப் போச்சுது.*

*போகிற போக்கைப் பார்த்தால் யாழ்ப்பாணம் தான் தேசிய மட்டத்தில முதலிடத்துக்கு வரும் போல்..*

*யாழ்ப்பாணம் எண்டா எவ்வளவு பெரிய இடம்? அதுக்குள்ள எப்பிடி நுளம்புக் கட்டுப்பாட்டைச் செய்து முடிக்கிறது எண்டு வடக்கு மாகாண சுகாதாரத் துறை மண்டையப் பிச்சுக் கொண்டிருக்குது. யாழ்ப்பாணம் பெரியாசுபத்திரியில டெங்குக்கு எண்டு விசேட வோர்ட் ஒண்டு மேலதிகமாத் திறந்திருக்கினமாம்.*

*யாழ்ப்பாணத்துக்குள்ள மாநகர சபைப் பகுதிக்குள் தான் நுளம்பு குடும்பம் நடத்திக் குஞ்சு பொறிச்சுக் குதூகலிக்குதெண்டு புள்ளி விபரங்கள் சொல்லுது. ஆனா நுளம்பைக் கட்டுப்படுத்த வேண்டியவை ஒண்டும் செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு நிக்கினம்.*

*என்ன? கேக்கவே உங்களுக்குக் கோவம் வருகுதெல்லே? இப்பிடித்தான் எனக்கும் பத்திக்கொண்டு வந்தது. சைக்கிள எடுத்துக் கொண்டு நாலு மிதி மிதிக்க நல்லூரடி வந்துட்டு.*

*அங்க போய் போனவை, வந்தவையிற்ற எல்லாம் வாய் வச்சுட்டன். ஏன் உங்களால டெங்கைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்குது? ஒரே கேள்வி தான் எல்லாரிட்டையும். இதில ஆச்சரியம் என்னவெண்டர் எல்லாரும் சொன்ன பதிலும் ஒண்டாப் போச்சு.*

*கேட்டவை எல்லாம் சொன்ன ஒரே பதில் "அவர் எங்கள ஒண்டுக்கும் விட மாட்டார்."*

*ஆரப்பா அந்த "அவர்". கொஞ்சம் விசாரிச்சுப்பாத்தன் அவர் ஏன் விடுறாரில்லை எண்டன்.*

*மாநகரத்துக்குள்ள என்ன செய்தாலும் தான் தான் செய்ததா காட்டுறதில அந்த அவருக்கு அலாதிப் பிரியமாம். கலியாண வீடெண்டா தான் தான் மாப்பிளை போலயும், செத்த வீடெண்டா தான் தான் பிணம் எண்டதாயும் "சீன்" போடுறதில சீலமாய் : சிறப்பா செய்வாராம். எப்பவும் தன்னோட திரியுற "புரட்சி"கரமான போட்டோக்காரனைக் கொண்டு, படமெடுத்து "பேஃஸ்புக்"ல அடிக்கொரு "அப்டேற்" போடுறது தான் அவருக்கு வேலையாம்.*

*டெங்கு தடுப்பு நல்லது தானே? செய்து போட்டு போட்டோ போட்டாலும் பரவாயில்லை செய்யட்டுமன் எண்டு கேட்டர் இல்லை மாநகரத்துக்கு கீழ இருக்கிற எந்த அலகும் சுயாதீனமா இயங்க அவர் விடமாட்டார்.*

*உண்மையாப் பார்தால் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதார அமைச்சுக்குக் கீழ இயங்க வேண்டிய ஒரு சுயாதீன கட்டமைப்பு. அதுக்கெண்டு முடிவெடுக்கிற முழு அதிகாரத்தோட ஒரு வைத்தியர் மத்திய அரசால நியமிக்கப்பட்டிருக்கிறார். பதவிப்படி பாத்தாலும் இவர் (வைத்தியர்) அவரை விடப் பெரியவர். அல்லது சம்மானவர். ஆனா இவரை "டொமினேற்" பண்ணுறது தான் அவருக்கு வேலை. இந்த இழுபறியில தான் மாநகர பகுதிக்குள்ள டெங்கு தடுப்பு இருக்குது.*

*அவர் தானாம் "அவர்".*

*சரி எங்க அவரைக் காட்டுங்கோ நான் கதைக்கிறன் எண்டன். இங்க இல்லை - அவர் அங்க எண்டிச்சினம். எங்க எண்டன்.*

*நல்லூருக்குப் பின்னால இருந்து சைக்கிளில எட்டி ஒரு மிதி முன்னால இருந்த அவரின்ர ஒபீசுக்கு முன்னால போய் நிண்டன்.*

*அங்கயும் அவர் இல்லை. அவர் அங்க போயிற்றாராம். எங்க எண்டு நினைக்கிறியள் ? மாமன்னர் வரி "வசூலிப்புக்குப்" போயிற்றாராம். ஏனப்பா வரி வசூலிக்க ஆக்கள் இருப்பினம் தானே? அவர அங்க என்னத்துக்கு. அதான் சொன்னமே ஒண்டு, புரட்சிக்கர போட்டோக்காரனுக்குப் போஸ் குடுக்க மற்றது சம்பளத்தை விடக் கூடவா வாங்கிற கிம்பளத்துக்கு.*

*என்னடா நடக்குது உங்க? நீங்கள் கேக்கிறது விளங்குது எனக்கு.*

*பொறுங்கோர் பொறுங்கோ சொல்லுவன் தானே ஏன் அந்தரப்படுறியள்.*

*வரிவசூலிப்புப் பகுதியின்ர தலை ஒரு அப்பாவியாம். அந்தாளின்ர உயிர்நாடி - ஜீவன் இன்னொரு வசூல் ராஜாட்ட தான் இருக்குதாம். பிரதம வருமான வரி அதிகாரி சட்டப்படி சிட்டை போட்டு வசூலிக்க, இங்கால அவரின்ர உயிர்நாடி சிட்டையே இல்லாமல் வசூலிச்சு அவருக்குக் குடுப்பாராம்.*

*சட்டப்படி வாடகை கட்டி, வரி குடுத்து வியாபாரம் நடத்திற நிரந்தரக் கடைக்காரரை யாவாரம் செய்ய விடாமல் - அந்தக் கடையளுக்கு வாறவயின்ற சைக்கிளுக்கும், மோட்டார் சையிக்கிளுக்கும் கட்டணம் அறவிடுறதும் அந்த உயிர் நாடியின் பினாமிகள் தானாம்.*

*யாழ்ப்பாணத்தில டீஜே பார்ட்டி வைச்சு டான்சு ஆடின கதை தெரியுமெல்லே உங்களுக்கு? அந்த டான்சுக்கும் அனுமதி குடுத்தது அவர் தான். இப்பத் தனக்கு சம்பந்தம் இல்லை எண்டுறாரம். தங்களிட்ட அவர் குடுத்த கடிதம் இருக்கு இந்தா பாருங்கோ எண்டு அந்த ஹொட்டேல் காரங்கள் சொல்லுறாங்கள்.*

*இப்ப விளங்குதோ உங்களுக்கு நத்தார் - புது வருச வியாபாரத்துக்கும், டெங்கு தடுப்புக்கும் என்ன சம்மந்தமெண்டு?*

*ஆக, அவர் இன்றி இங்க அணுவும் அசையாது பாருங்கோ...!*

- நரமுனி -

# நைஜீரியாவில் பழங்குடியினர் மோதல் இரண்டு நாட்களில் 140 பேர் உயிரிழப்பு



மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் இரு பழங்குடியின குழுக்களிடையே கடந்த 2 நாள்களாக நடந்து வரும் மோதலில் 140 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிளேட்டு மாகாணத்தின் பல்வேறு தொலைதூர கிராமங்களுக்கு துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்தவர்கள் அங்கிருந்தவர்கள் மீது கடந்த 2 நாள்களாக தாக்குதல் நடத்தினர்.

இதில் சுமார் 140 பேர் உயிரிழந்ததை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பானஅம்னஸ்டி இன்டர்நஷனஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருந்தாலும், கால்நடைகளை மேய்க்கும் நாடோடி பழங்குடி இனத்தைச் சேர்ந்த புலானி இனத்தைச் சேர்ந்த ஆயுதக் குழுவினர்தான் இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடோடி இனமான புலானிகளுக்கும் கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட விவசாய இனமான ஹாவ்சாக்களுக்கும் இடையே நீர், நில வளங்கள் தொடர்பாக நீண்ட காலமாக மோதல் நிலவி வருகின்றமை கவனிக்கத்தக்கது. (04)



# உக்ரைனின் வான்வழித் தாக்குதலில் ரஷ்யப் போர்க் கப்பல் சேதமடைவு

கிரீமியா தீபகற்பத்தில் உக்ரைன் நடத்திய வான்வழித் தாக்குதலில் தங்களது போர்க் கப்பல் சேதமடைந்ததாக ரஷ்யா நேற்று அறிவித்தது.

இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிரீமியாவின் பியோடோசியா நகரத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த நோவோசெர்காஸ்க் போர்க் கப்பல் மீது உக்ரைன் நடத்திய தாக்குதலில் அந்தக் கப்பல் சேதமடைந்தது.

விமானத்திலிருந்து ஏவுகணைகளை வீசி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்திய இரு உக்ரைன் விமானங்களை ரஷ்ய வான்பாதுகாப்பு ஏவுகணைகள் சுட்டுவீழ்த்தின என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நோவோசெர்காஸ்க் கப்பலைத் தாக்கியதன் மூலம் கருங்கடலில் தங்களது போக்குவரத்து எளிமையாகியுள்ளதாக உக்ரைன் அதிபர் வோலோதிமீர் ஸெலென்ஸ்கி மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாக ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட கிரீமியா ஆட்சித் தலைவர் செர்கேய் அக்ஸ்யோனோவ் கூறியுள்ளார்.

கடந்த 2014 ஆம் நடைபெற்ற உக்ரைன் உள்நாட்டுப் போரின்போது, உக்ரைனின் கிரீமியா தீபகற்பத்தை ரஷ்யா ஆக்கிரமித்து, அதனை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வரும் போரின் ஒரு பகுதியாக, கிரீமியாவிலுள்ள ராணுவ நிலைகள் மீதும், ரஷ்யாவையும் கிரீமியாவையும் இணைக்கும் ஒரே பாலத்தின் மீதும் உக்ரைன் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவின் போர்க் கப்பல் ஒன்றை உக்ரைன் தாக்கியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

# கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்காலம் தொடர்பாக இந்தியா – ரஷ்யா நாடுகளுக்கு இடையே ஒப்பந்தங்கள்



தமிழகத்தில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தின் எதிர்கால அணு உலைகள் தொடர்பாக இந்தியா-ரஷ்யா நாடுகளுக்கு இடையே முக்கிய ஒப்பந்தங்கள் செவ்வாய்க்கிழமை கையொப்பமானதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்திய மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் ரஷ்யாவுக்கு 5 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின்போது ரஷ்ய துணை பிரதமர் டெனிஸ் மன்ட்டுரோவை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்து, இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, அணுமின் நிலையம், மருந்துகள், மருந்தியல் பொருள்கள், மருத்துவக் கருவிகள் தொடர்பான ஒப்பந்தங்கள் இரு நாடுகளுகளுக்கு இடையே கையொப்பமாகின.

அங்கு, இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய ஜெய்சங்கர், ரஷ்ய துணை பிரதமர் உடனான சந்திப்பு குறித்து கூறுகையில், 'துணை பிரதமர் மன்ட்டுரோவுடனான சந்திப்பின்போது கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கான எதிர்கால அணு உலைகள் குறித்து முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. பாதுகாப்பு, அணுமின் உற்பத்தி, விண்வெளி ஆகிய துறைகளில் இந்தியாவின் சிறந்த கூட்டாளியாக ரஷ்யா உள்ளது. இந்தியா-யூரேஷியா பொருளாதார மண்டலத்துக்கு இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தை ஜனவரி மாத இறுதியில் தொடங்கும்' எனத் தெரிவித்தார்.

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் கடந்த 2002 இல் கட்டப்பட்ட கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 1,000 மெகாவாட் திறன்கொண்ட முதலாவது அணு உலை 2016 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த அணுமின் நிலையம் 2027 ஆம் ஆண்டில் முழு அளவிலான மின்உற்பத்தி திறனுடன் செயல்படத் தொடங்கும் என ரஷ்ய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. (04)

# ஆக்கிரமிப்பாளர்களிடம் ஹமாஸ் அடிபணியாது! அமைப்பின் தலைவர் சின்வர் உறுதிபடத் தெரிவிப்பு

முன் எப்போதும் எதிர்கொண்டிராத போரை தற்போது எதிர்கொண்டு வருவதாக ஹமாஸ் தலைவர் யாயா சின்வர் முதன்முறையாக வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் இயக்கம், கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தியது. காசாவின் எல்லையோரத்தில் உள்ள இஸ்ரேலின் நகரங்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

துப்பாக்கி ஏந்திய ஹமாஸ் இயக்கத்தினர் வீதி வீதியாகச் சென்று இஸ்ரேலியர்களை சுட்டுக்கொன்றனர். இந்தத் தாக்குதலை அடுத்து, இஸ்ரேல் பதிலடி கொடுக்கத் தொடங்கியது. இரு தரப்புக்கும் இடையேயான இந்தப் போர் 2 மாதங்களைக் கடந்து நடந்து கொண்டிருக்கிறது.

இந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர் அதன் தலைவர் யாயா சின்வர் என கூறப்படுகிறது. ஒக்டோபர் 7 ஆம் திகதிக்குப் பிறகு முதன்முறையாக இது குறித்து அவர் கருத்து தெரிவித்துள்ளார். அதில், "ஹமாஸின் ராணுவப் பிரிவான அல் கஸ்ஸாம், கடுமையான, முன் எப்போதுமில்லாத போரை எதிர்கொள்கிறது. இஸ்ரேல் பாதுகாப்புப் படையை நசுக்கும் பாதையில் அல் கஸ்ஸாம் உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களிடம் ஹமாஸ் ஒருபோதும் அடிபணியாது.

இஸ்ரேல் ராணுவத்தைச் சேர்ந்த 5,000 அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரை நாங்கள் குறிவைத்தோம். அவர்களில், 1,500 க்கும் மேற்பட்டோரை நாங்கள் கொன்றுள்ளோம். எங்கள் தாக்குதலில் 3,500 க்கும் மேற்பட்ட இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் படுகாயமடைந்துள்ளனர். 750 இஸ்ரேலிய ராணுவ வாகனங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல் கஸ்ஸாம் அழித்துள்ளது", என்று தெரிவித்துள்ளார்.



யாயா சின்வரின் இந்த தரவுகளை இஸ்ரேல் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் தாக்குதல்களால் அல் கஸ்ஸாம் கடுமையான அழுத்தங்களை சந்தித்து வருவதாகவும், அதன் காரணமாகவே தங்கள் படையினரை ஊக்கப்படுத்தும் நோக்கில் மிகைப்படுத்தப்பட்ட தரவுகளை யாயா சின்வர் கூறி இருப்பதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காசாவில் தரைப்படை மேற்கொண்டு வரும் ராணுவ நடவடிக்கையில் இதுவரை 156 வீரர்கள் மட்டுமே கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. மேலும், 200 க்கும் குறைவான பாதுகாப்புப் படையினரே காயமடைந்துள்ளதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. வாகனங்கள் மீதான தாக்குதலைப் பொறுத்தவரை, சரியான எண்ணிக்கை தங்களிடம் இல்லை என தெரிவித்துள்ள இஸ்ரேல் பாதுகாப்புப் படை, அதேநேரத்தில் சில வாகனங்கள் மட்டுமே பழுது பார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதாகவும், மற்ற வாகனங்கள் உடனடியாக பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் களத்துக்குத் திரும்பி இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் தனது இலக்குகளை நோக்கி படிப்படியாக முன்னேறி வருகிறது என்று தெரிவித்துள்ள அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட், எங்கள் துப்பாக்கி குண்டுகளை யாயா சின்வர் விரைவில் சந்திப்பார் என்றும் எச்சரித்துள்ளார். (04)

# கரபிஞ்ச கிராமத்தில் அபிராமி அறநெறி பாடசாலை சுவாமி நீலமாதவானந்தா ஜீயால் திறந்து வைப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷன் தன்னுடைய புதிய சேவை நிலையத்தை நுவரெலிய மாவட்டம் கொட்டகலையில் அமைத்து வருகிறது.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் இரத்தினபுரிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து இந்து தர்மத்தின் வழிபாட்டு முறைகளை விரிவாக எடுத்துரைத்து சொற்பொழிவாற்றினார்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கரபிஞ்ச கிராமத்தில் அபிராமி அறநெறி பாடசாலையை திரை நீக்கம் செய்து தொடங்கி வைத்ததோடு அங்குள்ள கிராம மக்களுக்கு தர்மத்தின் வழியில் வாழ்தல் என்னும் தொனி பொருளில் உரையாற்றினார்.

இரத்தினபுரி மாவட்டம் அருள்மிகு ஸ்ரீ ரத்தின புரீஸ்வரர் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இந்து ஸ்வயம் சேவக குழுவினரின் பெண்களுக்கான முகாமில் கலந்து கொண்டு, யுவதிகளை சமுதாயத்தின் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வது என்ற பொருளில் உரையாற்றினார்.

# கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் அறிவுச் சமர் - சீசன் - 2 போட்டி!

(நூருல் ஹுதா உமர்)

தமது 75 வது ஆண்டில் காலடியெடுத்து வைத்திருக்கின்ற கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு, கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், அறிவுச் சமர் கலை மன்றத்துடன் இணைந்து நடாத்துகின்ற கல்முனை வலய 1 ஏபி தர தேசிய பாடசாலைகளுக்கிடையிலான "அறிவுச் சமர் - சீசன் 2" போட்டி நிகழ்சிகள் நேற்று கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதில், கல்முனை ஸாஹிறாக் கல்லூரி, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி, நிந்தவூர் அல்- அஷ்ரக் தேசிய பாடசாலை, காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி, கல்முனை உவெஸ்லி உயர் கல்லூரி, மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி மற்றும் மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி ஆகியன பங்கேற்கின்றன.

# புத்தளம் அல்-கலம் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு




(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் அல்-கலம் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு புத்தளத்தில் உள்ள கே. ஏ. பாயிஸ் மண்டபத்தில் அல் - கலம் கல்வி நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் வைத்தியர் சஜீத் அவர்களின் தலைமையில், அதிபர் அல் காரி எம். டீ. எம். பௌஸான் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கௌரவ புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், விசேட அதிதிகளாக மதுரங்குளி மேர்சி லங்கா கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ் முனாஸ், புத்தளம் கதீஜா பெண்கள் அரபுக் கல்லூரியின் நிர்வாகத் தலைவர் அல்ஹாஜ் ஜஃப்ரிஷ், முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பிரமுகர் உட்பட பல சிறப்பு அதிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், தாம் ஆரம்பித்துள்ள பிளஸ்மச் நிறுவனத்தினால் புத்தளம் மாவட்டத்தில் "அறிவால் உலகை ஆள்வோம் அறிவார்ந்த சமூகமே எமது இலக்கு" எனும் இலக்குடன் அதன் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து சகல பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மற்றும் பாடசாலைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றமையையும் குறிப்பிட்டார்.



# தம்பலகாமம் பகுதியில் வீசிய சூழல் காற்று 5க்கு மேற்பட்ட வீடுகளும், கடையும் சேதம்



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் நேற்றிரவு வீசிய சுழல் காற்று காரணமாக தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவின் பத்தினிபுரம், இக்பால் நகர்முதலான பகுதிகளில் சுமார் ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளும், கடை ஒன்றும் கூரைகள் அள்ளி வீசப்பட்டுள்ளதுடன் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதன்போது சிலருக்கு சாதாரண காயங்களும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கனமழையுடன் வீசிய காற்று காரணமாக வீடுகளின் கூரைகள் மற்றும் பலன் தரும் மரங்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது தற்காலிக இடமின்றி அடுத்த மழை பெய்தால் எங்கே செல்வது என தெரியாதுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குடியிருப்பு பகுதிகள் சேதமாக்கப்பட்டுள்ளதால் தங்குவதற்கு இடமின்மை பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் தங்களுக்கு தேவையான உதவிகளை செய்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பாலமுனை ரைஸ் ஸ்டார் விளையாட்டுக் கழக 2024 ஆம் வருடத்திற்கான புதிய நிருவாக தெரிவு



(எம்.எப்.நவாஸ்)

பாலமுனை ரைஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 2024 ஆம் வருடத்திற்கான புதிய நிருவாக தெரிவு நேற்று அல் ஹிதாயா மகளீர் கல்லூரியில் இடம்பெற்றது.

தலைவர் – பாயிஸ், செயலாளர் சிபான், பொருளாளர் ஹம்தான், உப தலைவர் அசாம், உப செயலாளர் அஸ்மின் ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக ஸ்தாபக உறுப்பினர் மனாப், பர்ஹான், பாரிஸ் – நீதிமன்ற உத்தியோகத்தர், அப்துல் அலீம், சாஜின், றினாஸ், ஜுபான் ஆகியோரும் தெரிவாகினர். கணக்குப் பரிசோதகராக பர்ஸாத் தெரிவானார்.

ஏனைய விளையாட்டுக்களின் அணித் தலைவர்களாக, உதைபந்து – அஸாம், கிரிக்கட் – பையிஸ், எல்லே – கியாஸ், கடினப்பந்து – சீத், கடினப் பந்து உபதலைவர் – ஆசிக், றகர் – நஸீல், தடகளம்– சனூஸ், கபடி – அம்ருல்லாஹ், கரப்பந்து – இனாமுல் ஹக், ஹொக்கி – ஜர்பான் (நீதிமன்ற உத்தியோகத்தர்), துரோபோல் – முஸ்னித் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஊட கப் பொறுப்பாளராக றுகைமி அகமட் தெரிவானார்.

## பெந்தோட்டக் கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பிரஜை பலி

இலங்கைக்கு நத்தார் பண்டிகையைக் கொண்டாட வந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் காலி – பெந்தோட்டக் கடலில் நீராடிக் கொண்டிருக்கும்போது கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் டிட்டோ வொல்லோவ் என்ற 51 வயதான கஸகஸ்தான் பிரஜையாவார். இவர் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவதற்கா கத் தனது மனைவியுடன் இலங்கைக்கு வந்த நிலையில் இருவரும் பெந்தோட்டவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், இவர் தனது மனைவியுடன் பெந்தோட்டக் கடலில் நீராடிக் கொண்டிருக்கும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.






## களுவாஞ்சிக்குடியில் தேசிய பாதுகாப்பு தினம்

(வி.ரி.சகாதேவராஜா)

உலகை உலுக்கிய சுனாமி அனர்த்தத்தினை நினைவு கூரும் தேசிய பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது ஏற்பாடு செய்த பிரதான நிகழ்வானது நேற்று (26) பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இதனை முன்னிட்டு அனர்த்தங்களில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து மக்களுக்காக பிரார்த்தனை, இவ்வாறான இழப்புக்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பான பொதுமக்களுக்கு விழிப்புணர்வு, எதிர்காலத்தில் சுனாமி அனர்த்தத்தில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான தயார்ப்படுத்தலை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகள் அனர்த்த முகாமைத்துவ சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டன. விசேட நிகழ்வாக மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது பொதுமக்கள், ஆலய பரிபாலன சபையினர், கிராம - மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரின் பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தது.

இதில் விசேட அம்சமாக பிரதேச செயலக பிரிவின் 45 கிராம சேவகர் பிரிவுகளிலும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

## இந்தோனேசியாவில் சீன நிறுவனத்தின் நிக்கல் தொழிற்சாலையின் எரி உலை வெடித்து விபத்து!

### 18 பேர் உயிரிழந் துள்ளதாகத் தகவல்



இந்தோனேசியாவில் சீன நிறுவனததுக்குச் சொந்தமான நிக்கல் தொழிற்சாலையில் எரி உலை வெடித்துச் சிதறி ஏற்பட்ட விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வர்த்தக வழித் தடதிட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தோனேசியாவின் சுலாவெசி பகுதியில் பல நிக்கல் தொழிற்சாலைகளை சீன நிறுவனங்கள் நடத்தி வருகின்றன.

மோரோவாலி பகுதியில் அமைந்துள்ள அத்தகைய தொழிற்சாலை ஒன்றின் எரி உலை அண்மையில் வெடித்துச் சிதறியது. இதில் 9 இந்தோனேசிய தொழிலாளர்களும், 4 சீன தொழிலாளர்களும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், விபத்தில் காயடைந்த மேலும் 5 பேர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து இதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக நேற்று செவ்வாய்க்கிழமை உயர்ந்தது.

நிக்கல் வளம் நிறைந்த சுலாவெசி மாகாணத்தில் ஏற்கெனவே 2 தொழிற்சாலைகளில் விபத்து ஏற்பட்டு 4 பேர் உயிரிழந்தமை நினைவுகூரத்தக்கது. (04)

# HappyMarket

Issue 27 December 2023

# BREAKING NEWS

## பிரமாண்டமான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்




## உங்கள் அல்லங்காடி கொண்டாட்டத்தில்

**பிரமாண்டமான கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளுடன் உங்களை சந்திக்க வருகின்றோம்.**

**டிசம்பர் மாதம்**

## 30ஆம், 31ஆம்

**திகதிகளில்**



**பி.ப 2:00-8:00 மணி வரை யாழ் கோட்டையில் (பண்ணை சுற்று வட்டம்) நடைபெறும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

Tourism Northern Province | synamon global | happymarket.lk | தமிழ் 99.5 99.7 | காலைக்கதிர் Kalaikkathir | BirdFather More Social More Business | IDEA FACTORY




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.12.2023இல் வெளியிடப்பெற்றது.